## தூத்துக்குடியில் மாநில அளவில்

# மனித உரிமை காப்பாளர் பயிற்சி

தூத்துக்குடி, செப்.16: மதுரையை தலைமையிடமாகக்கொண்டு செயல்படும் மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு சார்பில், மாநில அளவிலான மனித உரிமை காப்பாளர் பயிற்சி தொடக்க விழா தூத்துக்குடி நற்செய்தி நடுவத்தில் நடைபெற்றது. பயிற்சி முகாமை மாநில பெண்கள் ஆணையதலைவர்கண்ணகி பாக்கியநாதன் தொடக்கி வைத்து பேசினார். மனித உரிமைகள் தினம் குறித்து மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பின் தேசிய செயலர் ஹென்றி திபேன் பேசினார். கருத்தரங்கில், மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு மாநில ஒருங்கிணைப்பாளர் ஆசிர்வாதம், திருநெல்வேலி வழக்குரைஞர் பிரிட்டோ, மாவட்ட முதன்மை குரு கிருபாகரன், வழக்குரைஞர் அதிசயகுமார், பேராசிரியை பாத்திமா பாபு, செல்வராஜ், எம்பவர் அமைப்பின் செயல் இயக்குநர் சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடியில் மாநில அளவிலான மனித உரிமை காப்பாளர் பயிற்சி தொடக்க விழாவில் மாநில பெண்கள் ஆணைய தலைவர் கண்ணகி பாக்கியநாதன் பேசினார்.

தினகரன்
Sun, 16 September 2018
epaper.dinakaran.com/c/32261056